CC 255/2017

27.06.2025.

அ.சா.8,

பெயர்: தங்கராஜ்

த/பெ. தண்டபாணி

அ.சா.8 கு.ப.ம.எண்.3600/2023-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused Present. Accused counsel present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கின் சம்பவயிடம் அருகில் உள்ள சரவணா ஸ்டோருக்கு பக்கமாக ஒரு வளைவான பாதை உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகள் அனைவரும் இறந்த நபரின் உறவினர்கள் என்றால் சரியல்ல, அதில் சாட்சி மோகனப்பிரியா என்பவர் மட்டும் உறவினர்.

மற்ற கண்ணுற்ற சாட்சிகளும் இறந்த நபரின் உறவினர்கள்தான் என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் வழக்கறிஞர் வைத்து ஒரு இழப்பீடு வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் எனது விசாரணையில் அது பற்றி அவர் கூறவில்லை. சம்பவயிடம் அருகில் சிற்றுந்து நிற்கும் நிறுத்தம் உள்ளது என்றால் அது பற்றி விசாரணையில் கூறவில்லை.

சரவணா ஸ்டோரில் இருந்து வளைவாக செல்லும்பாதை ஆலமரத்தும்மன் கோவில் செல்லும் பகுதி என்றால் சரிதான். சரவணா ஸ்டோருக்கு தென்வடலாக ஒரு சாலை உள்ளது என்றால் சரிதான். சரவணா ஸ்டோருக்கு அருகில் பர்னிச்சர் கடை, கறிகடை எல்லாம் உள்ளது என்றால் சரிதான்.

சரவணா ஸ்டோருக்கு கிழபுறம் உள்ள சாலையில் இருபுறமும் வேகத்தடை உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. சம்பவயிடத்தில் இருபுறமும் வேகத்தடை இருந்தது என்றாலும் வழக்கிற்காக நான் ஞாபகமில்லையென்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவயிடம் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான்.

வழக்கில் இருசக்கர வாகனம் ஓட்டிவந்த நபர்தான் வளைவான பகுதியில் ஆரன் அடிக்காமல் வந்ததால் அவருடைய அஜாக்கிரதையால்தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லையென்றாலும் சரியல்ல. விபத்தில் இறந்தவர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தார் என்றால் சரிதான்.

இறந்துபோன நபர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வரும்போது ஒலி எழுப்பாமல் திரும்பியதால்தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லையென்றாலும் நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறுதலாக இறுதியறிக்கை தாக்கல செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.